# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2022 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம்

---

*(2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2022, ஒற்றோபர் மாதம் 28 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 15.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2022 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம்

[2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.- ஓ. 71/2021

## (70 ஆம் அத்தியாயமான) மோசடிகளைத் தடுத்தல் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*70 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (70 ஆம் அத்தியாயமான) மோசடிகளைத் தடுத்தல் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, "அது எழுத்திலிருந்தாலொழியவும்" என்பதிலிருந்து அப்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(அ) இயைபான உறுதி அல்லது சாதனம் எழுத்திலிருந்தாலொழியவும், ஒவ்வோர் உறுதி முடிப்பவரினாலும் கையொப்பமிடப்பட்டாலொழியவும், அத்துடன் ஒரேநேரத்தில் சமுகமளிக்கும் இரு சாட்சிகளின் முன்னிலையில் பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டாலொழியவும்; அத்துடன்

(ஆ) அத்தகைய ஒவ்வோர் உறுதிமுடிப்பவரினதும் இடதுகை அல்லது வலதுகைப் பெருவிரலடையாளம் அல்லது அத்தகைய உறுதிமுடிப்பவரின் இரு கைப்பெருவிரல்களும் இல்லாதிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, வேறேதேனும் கைவிரலின் அல்லது கால்விரலின் அடையாளம் இயைபான உறுதியின் அல்லது

சாதனத்தின் மூலப்பிரதியில், இணைப்பிரதியில் மற்றும் நொத்தாரிசுவின் பிரதியில் கையொப்பத்துக்குமேல் அல்லது அதற்கருகில் இடப்பட்டிருந்தாலொழியவும்,

சட்டத்தில் வலுவுடையதாகவோ அல்லது பயனுடையதாகவோ இருத்தலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய எவரேனும் உறுதிமுடிப்பவரின் கையொப்பத்தை அல்லது கைப்பெருவிரல் அடையாளத்தை ஏதேனும் காரணத்துக்காகப் பெற்றுக் கொள்ளமுடியாதிருக்கும் பட்சத்தில், பிரசித்த நொத்தாரிசு, அத்தாட்சிப்படுத்துகையில் அத்தகைய காரணத்தைக் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுதி முடிப்பவர் விடயத்துக்கேற்ப, வேறேதேனும் கை விரலடையாளத்தை அல்லது கால்விரல் அடையாளத்தை இடுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) "இதனகத்துப்பின்னர் குறிப்பிடப்பட்ட முறையில் நிறைவேற்றப்பட்டாலொழியவும் செல்லுபடியாதலாகாது;" என்பதிலிருந்து அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, "விடயத்துக்கேற்ப, (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய நிறைவேற்றப்பட்டாலொழியவும் செல்லுபடியாதலாகாது." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலமும்:-

''(2) மரணசாதனக்காரர், ஒரேநேரத்தில் சமுக மாயிருக்க வேண்டிய ஒரு பிரசித்த நொத்தாரிசுவினதும் இரு சாட்சிகளினதும் முன்னிலையில், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட மரணசாதனத்தின், இறுதி விருப்பாவணத்தின் அல்லது விருப்பாவணப் பின்னிணைப்பின் அடியில் அல்லது முடிவில் -

(அ) கையொப்பமிடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவரது இடதுகை அல்லது வலதுகைப் பெரு விரலடையாளத்தை இடுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் காரணத்துக்காக மரணசாதனக்காரரின் கைப்பெருவிரலடையாளத்தைப் பெற்றுக்கொள்ளமுடியாதிருக்கும் பட்சத்தில், அவர், விடயத்துக்கேற்ப, வேறு ஏதேனும் கைவிரலடையாளத்தை அல்லது கால்விரலடையாளத்தை இடுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தாற் றிருத்தப்படுகின்றது:-

(1) ''கையொப்பம்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, "கையொப்பம் மற்றும் மரணசாதனக்காரரின் அல்லது மரண சாதனக்காரியின், விடயத்துக்கேற்ப, இடதுகை அல்லது வலதுகைப்பெருவிரலடையாளம் அல்லது வேறேதேனும் கைவிரலடையாளம் அல்லது கால்விரலடையாளம்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவை உடனடுத்துப் பின்வரும் காப்புவாசகத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

"ஆயின், எவ்வாறாயினும், மரணசாதனக்காரரின் விடயத்துக்கேற்ப, கையொப்பத்தை அல்லது இடதுகை

அல்லது வலதுகைப்பெருவிரலடையாளத்தை அல்லது வேறேதேனும் விரலடையாளத்தை ஏதேனும் காரணத்துக்காகப் பெற்றுக்கொள்ளமுடியாத பட்சத்தில், மரணசாதனக்காரர் அவரது கால்விரலடையாளத்தை இடுதல் வேண்டுமென்பதுடன் பிரசித்த நொத்தாரிசு அத்தகைய காரணத்தை அவரது அத்தாட்சிப் படுத்துகையில் குறிப்பிடுதலும் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ''இணைப்பிரதிகளில்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''முப்பிரதிகளில்'' என்னும் சொல்லை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

''உறுதிகள் முப்பிரதிகளில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.''.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*